செ.வெ.எண்: 31 நாள்: 12.01.2018

**விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் அலுவலர்கள் நன்கு பயிற்சி அளிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் 11.01.2018 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருவரங்குளம் வட்டாரம், பூமத்தான்பட்டியில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் அறுவடை பரிசோதனை பணியையும், வல்லத்திராக்கோட்டையில் திரு.ராமசாமி என்ற விவசாயி தோட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின்கீழ் ரூ.75,000 மானியத்தில் நிழல்வலைக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள கரும்பு ஒரு பருகரனை நாற்றங்கால் தயாரித்தல் பணியையும், வம்பன் பயறு வித்து பெருக்கு பண்ணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இயந்திரம் மூலம் சான்று பெற்ற விதைகள் சணல் சாக்கு மூட்டைகளில் தைக்கும் பணியையும், மண்புழு உரம் தயாரித்தல் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் பண்ணையில் கோ-7 ரக தட்டைப்பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ள வயலையும் பார்வையிட்டு வயல்களில் விதைப்பு கருவி மூலம் வம்பன் 6 ரக உளுந்து விதைப்பு பணிகளையும் துவக்கி வைத்தார். பண்ணையில் விவசாயிகளுக்கு நெல் இயந்திர நடவு மற்றும் நேரடி விதைப்பு தொழில்நுட்ப கையேட்டினை வழங்கியதுடன் வேளாண் இடுபொருட்களையும் வழங்கினார். பின்னர் வம்பன் நால்ரோடு கிராமத்தில் திரு.கணேசன் என்ற விவசாயி வயலில் நடவு செய்யப்பட்டுள்ள நெல் விதை பண்ணையையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் பயிர்காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்கவும், விவசாயிகளுக்கு வேளாண் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து நன்கு பயிற்சி அளிக்கவும், மானிய விலையில் வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கவும், சம்பந்தப்பட்ட வேளாண் அலுவலர்களுக்கு உத்திரவிட்டார். மேலும் விவசாயிகள் தமிழக அரசின் வேளாண் திட்டங்களை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வேளாண் இணை இயக்குநர் திரு.ராஜகோபால், வேளாண் உதவி இயக்குநர் திரு.சக்திவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**